www.Padasalai.Net www.TrbTnpsc.com

# Kanchipuram Dt

## முதல் திருப்புதல் தேர்வு – 2025
## பன்னிரெண்டாம் வகுப்பு

**நேரம்: 3.00 மணி** **வரலாறு** **மதிப்பெண்கள்:90**

### பகுதி – I

I **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **20x1=20**

1. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார்?
அ) 1915 ஆ) 1916 இ) 1917 ஈ) 1918

2. "இந்தியாவின் முதுபெரும் மனிதர்" என அழைக்கப்படுபவர்.
அ) பாலகங்காதர திலகர் ஆ) M.K. காந்தி
இ) தாதாபாய் நௌரோஜி ஈ) சுபாஷ் சந்திர போஸ்

3. கல்கத்தாவில் அனுசிலன் சமிதியை நிறுவியவர்.
அ) புலின்பிஹாரி தாஸ்
ஆ) ஹேமச்சந்திர கானுங்கோ
இ) ஜதிந்தரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர்குமார் கோஷ்
ஈ) குதிரம் போஷ் மற்றும் பிரஃபுல்லா சாக்கி

4. கதார் கட்சி யாரால் நிறுவப்பட்டது?
அ) லாலா லஜபதிராய் ஆ) ஏ.சி. மஜூம்தார்
இ) லாலா ஹர்தயாள் ஈ) சங்கர்லால் பாங்கர்

5. இந்தியாவின் மூவர்ணக்கொடி எப்போது ஏற்றப்பட்டது?
அ) டிசம்பர் 31, 1929 ஆ) மார்ச் 12, 1930
இ) ஜனவரி 26, 1930 ஈ) ஜனவரி 26, 1931

6. கூற்று : பி.ஆர். அம்பேத்கர் மஹத் சத்தியாகிரகத்தைத் தொடங்கினார்.
காரணம் : அவர் இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களை ஒருங்கிணைக்க முயன்றார்.
அ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி, காரணம் தவறு
ஈ) கூற்று தவறு, காரணம் சரி

7. முதலாவது பயணிகள் இரயில் 1853 இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?
அ) மதராஸ் – அரக்கோணம் ஆ) பம்பாய் – பூனா
இ) பம்பாய் – தானே ஈ) கொல்கத்தா – ஹூக்ளி

8. முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?
அ) உருது ஆ) இந்தி இ) மராத்தி ஈ) பாரசீகம்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



9. 1942 இல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கப்பட்ட போது இந்தியாவின் அரசபிரதிநிதி யார் ?
அ) வேவல் பிரபு ஆ) லின்லித்கோபிரபு
இ) மௌண்ட்பேட்டன் பிரபு ஈ) வின்ஸ்டன் சர்ச்சில்

10. பின்வரும் நிகழ்வுகளின் சரியான வரிசையைத் தேர்வு செய்க.
i) இந்திய தேசிய இராணுவம் மீதான விசாரணை ii) நேரடி நடவடிக்கைநாள்
iii) ஆகஸ்ட் கொடை iv) தனிநபர் சத்தியாகிரகம்
அ) i, ii, iii, iv ஆ) iii, i, ii, iv இ) iii, iv, i, ii ஈ) i, iii, iv, ii

11. பின்வருவனவற்றைப் பொருத்திச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | | |
|---|---|---|
| அ) சீன மக்கள் குடியரசு | – | 1. பெல்கிரேடு |
| ஆ) பாண்டுங் மாநாடு | – | 2. மார்ச் 1947 |
| இ) ஆசிய உறவுகள் மாநாடு | – | 3. ஏப்ரல் 1955 |
| ஈ) அணிசேரா இயக்கத்தின் தோற்றம் | – | 4. ஜனவரி 1, 1950 |

அ) 3 4 2 1 ஆ) 4 2 3 1 இ) 4 3 2 1 ஈ) 3 2 4 1

12. மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம் ________
அ) காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் இ) ஆந்திரா ஈ) ஒரிஸா

13. இந்திய அரசாங்கம் ________ வகையான மேம்பாட்டிற்காக உறுதி பூண்டுள்ளது.
அ) முதலாளித்துவ ஆ) சமதர்ம இ) தெய்வீக ஈ) தொழிற்சாலை

14. டாட்டா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் எப்போது அமைக்கப்பட்டது ?
அ) 1905 ஆ) 1921 இ) 1945 ஈ) 1957

15. மெகல்லனின் மறைவுக்குப் பிறகு எந்தக் கப்பல் திரும்பியது ?
அ) சாண்டாமரியா ஆ) பிண்ட்டா இ) நினா ஈ) விட்டோரியா

16. ________ நகரம் 'காட்டன்பொலிஸ்' எனும் புனைப் பெயரைப் பெற்றது.
அ) மான்செஸ்டர் ஆ) லங்காசயர் இ) லிவர்பூல் ஈ) கிளாஸ்கோ

17. இளம் இத்தாலி இயக்கம் ________ ஆண்டு துவக்கப்பட்டது.
அ) 1822 ஆ) 1827 இ) 1831 ஈ) 1846

18. கீழ்க்காண்பனவற்றுள் எந்நாடு மையநாடுகள் சக்தியில் அங்கம் வகிக்கவில்லை ?
அ) பல்கேரியா ஆ) ஆஸ்திரிய – ஹங்கேரி இ) துருக்கி ஈ) மான்டிநீக்ரோ

19. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் ________ ஆவார்.
அ) யாமமோடோ ஆ) ஸ்கூஸ்னிக்
இ) இரண்டாம் கெய்சர் வில்லலியம் ஈ) ஹிரோஹிடோ

20. அணிசேரா இயக்கத்தின் முதல் உச்சி மாநாடு ________ல் நடைபெற்றது.
அ) பெல்கிரேடு ஆ) பெய்ஜிங் இ) பாண்டுங் ஈ) பாலி

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி – II

**II ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30க்கு கண்டிப்பாக விடையளி.** **7x2=14**

21. அவுரி கலகம் குறித்து குறிப்பு வரைக.
22. மிதவாத தேசியவாதிகளின் 'இறைஞ்சுதல் கொள்கை' (The Medicant Policy) என்றால் என்ன ?
23. பி.ஆர். அம்பேத்கரால் வழிநடத்தப்பட்ட மஹத் சத்தியாகிரகம் பற்றி அறிவது என்ன ?
24. லாகூர் தீர்மானத்தின் முக்கியத்துவம் என்ன ?
25. ஜேவிபி குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன ?
26. சமதர்ம சமூக அமைப்பு என்பதைப் பற்றி நீவிர் அறிந்ததென்ன ?
27. 1493 ஆம் ஆண்டின் போப்பின் ஆணை பற்றி நீவிர் அறிந்ததென்ன ?
28. பண்டைய ஆட்சி முறையின் மூன்று எஸ்டேட்டுகளை விவாதிக்கவும்.
29. ஜெர்மனி பிரான்சை தனிமைப்படுத்த முனைந்ததேன் ?
30. அச்சு நாடுகளின் பெயர்களைப் பட்டியலிடுக.

## பகுதி – III

**III ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40க்கு கண்டிப்பாக விடையளி.** **7x3=21**

31. இந்திய நிர்வாகச் செலவின விவரங்களைக் கூறுக.
32. வ.உ. சிதம்பரத்தின் சுதேசி இயக்க முயற்சிகள் குறித்து எழுதுக.
33. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது ?
34. டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) பற்றி குறிப்பு எழுதுக.
35. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்காத அமைப்புகளின் பெயரை எழுதுக.
36. இந்திய வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கான காரணங்கள் யாவை ?
37. "செப்டம்பர் படுகொலைகள்" எதனால் ஏற்பட்டது ?
38. அகழிப் போர் எவ்வாறு நடத்தப்பட்டது ?
39. இந்தோனேஷிய விடுதலைக்கு சுகர்னோ ஆற்றியப் பங்கை மதிப்பிடுக.
40. வங்கப் பிரிவினைப் பற்றி குறிப்பு வரைக.

## பகுதி – IV

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **7x5=35**

41. அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் – பொருளாதாரக் காரணிகளை ஆய்க.

*(அல்லது)*

ஆ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



42. அ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.

*(அல்லது)*

ஆ) பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது ?

43. அ) பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்க.

*(அல்லது)*

ஆ) சுதந்திரப் போராட்டத்தை இந்திய தேசிய இராணுவ விசாரணை எவ்வாறு தீவிரப்படுத்தியது ?

44. அ) 1920 முதல் 1956 வரை இந்திய மாநிலங்கள் மறு சீரமைக்கப்பட்டதின் பல்வேறு நிலைகளைக் கண்டறிக.

*(அல்லது)*

ஆ) சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் குறித்து மதிப்பிடுக.

45. அ) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் குறித்து விவரிக்கவும்.

*(அல்லது)*

ஆ) ஒருங்கிணைந்த ஜெர்மனியின் உண்மையான வடிவமைப்பாளர் பிஸ்மார்க்கே என ஏன் சொல்லப்படுகிறது ?

46. அ) இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஜெர்மனியும், ஹிட்லரும் எந்த அளவிற்குக் காரணமாவார்கள் என்பதனை ஆய்ந்து கூறுக.

*(அல்லது)*

ஆ) கீழ்க்கண்ட இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.

1) ஜெர்மனி
2) இங்கிலாந்து
3) ரஷ்யா
4) இத்தாலி
5) ஜப்பான்

47. அ) உலகளாவிய பிரச்சனைகளைத் தீர்ப்பதில் ஐ.நா. சபையின் பங்கினை மதிப்பிடுக.

*(அல்லது)*

ஆ) 1920 முதல் 1940 வரை இந்திய வரலாற்றில் நடந்த ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் வரைக.

***//***

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com